DEPOSITION OF WITNESS

**In the Court of III Additional District and Sessions Judge, Tiruchirappalli.**

**Session Case No. 13/2021**
**Present – B.Saravanan, B.Sc.B.L,**
**III Additional District and Sessions Judge, Tiruchirappalli.**

Prosecution witness

(Chapter XXIII Code of Criminal Procedure)

| | | | | |
|---|---|---|---|---|
| Name | : | **ராஜ்கிரன்** | Caste | : |
| Father Name | : | **சேகர்** | Calling | : |
| Village | : | | Religion | : |
| Taluk | : | | Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day of **09.02.2026**

**PW - 11**

**(1** முதல் **3** எதிரிகள் ஆஜர்**)**

**முதல் விசாரணை**

நான் திருச்சி மாவட்டம், இலால்குடி தாலுக்கா, பெருவளநல்லூரில் வசிக்கிறேன். வழக்கு சமயத்தில் ஒசூரில் ஒரு நிறுவனத்தில் வேலை செய்தேன். தற்சமயம் விராலிமலையில் ஒரு நிறுவனத்தில் வேலை செய்கிறேன். அசா.10 வேல்முருகனை தெரியும். இந்த வழக்கில் இறந்துபோன பெரியசாமி என்பவரை தெரியும். அவரது மகன்கள், மனைவி மற்றும் உறவினர்களைத் தெரியும். கடந்த 19.01.2020 ஆம் ஆண்டு அன்று காலை நானும், அசா.10 வேல்முருகனும் டீ குடிக்க பெருவளநல்லூர் புது ஆறு அருகே உள்ள டீக்கடைக்கு சென்றோம். அங்கு பெரியவர் பெரியசாமியை காணவில்லை என்று அவரது உறவினர்கள் தேடிக் கொண்டிருந்தார்கள். நாங்களும் சேர்ந்து தேடினேன். அதன்பிறகு புள்ளம்பாடி புதுப்பாலம் அருகே ஆற்றில் ஒரு உடல் மிதந்து வந்தது. அதை தீயணைப்பு துறையினர் தூக்கி கரையில் போட்டார்கள். அது பெரியசாமி உடலாகும். அவர் இறந்துவிட்டார். அவருக்கு கழுத்து, கை,

ஆகிய இடங்களில் காயங்கள் இருந்தன. போலிசார் என்னை விசாரித்தார்கள். பெரியசாமியின் உடலில் வெட்டுக்காயங்கள் இருந்தது பற்றியும், அவரை ஆற்றில் நாங்கள் தேடியது பற்றியும் போலிசாரிடம் சொன்னேன்.

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

பெரியசாமியின் உடலை புள்ளம்பாடி வாய்க்கால் அருகே தீயணைப்பு துறையினர் தேடி கண்டுபிடித்தது மட்டும்தான் தெரியும். அவரது இறப்பு தொடர்பாக வேறு விபரங்கள் எனக்கு தெரியாது.

**மறுவிசாரணை** – இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு கூறப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டி சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

மூன்றாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.